இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 30.06.2026

# அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்க!

**“நா**ம் நமது படங்களின் மூலமாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பல்வேறு விழிப்புணர்வு கருத்துக்களைச் சொன்னோம்” என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தனது வாழ்க்கை வரலாற்றை வரிசைப்படுத்தும் போது முதலமைச்சர் விஜய் சொன்னார்.ஆம், அது உண்மை தான்!

அதில் ஒன்று ...

**நோவ் ப்ளீஸ் நா ப்ளீஸ் நா**
**தம்பிக்களுக்கோசம் தம்பிக்களுக்கோசம்**
**வா வா வா அய்யய்யோ - என்ற பாடல் ஆகும்.**
**அதில் வரும் மிக முக்கியமான கொள்கை விளக்க வரிகள் இவை தான்...**

**பத்தாது பாட்டில் நா குடிக்க**
**அண்டால கொண்டா சேர்ஸ் அடிக்க**
**கெடா வெட்டி கொண்டாங்கடா**
**என் பசி நான் தணிக்க - என்பது ஆகும்.**

**டவுன் டடவுன் டடவுன் டவுன் டவுன் டவுன்** - என்று ஆடி தனது தொண்டர்களை ஈர்த்தார் விஜய். விழிப்புணர்வை ஏற்படுத்தினார் விஜய்.

**மில்லி உள்ள போனா போதும்**
**கில்லி வெல்ல வருவான்டா**
**மில்லி உள்ள போனா போதும்**
**கில்லி வெல்ல வருவான் பாரு** - என்பதும் அந்தப் பாடலில் உள்ள வைர வரியாகும். அப்படி வந்த 'கில்லி' சரத் தான் இப்போது மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் சரத்குமார். இவரை 'கில்லி' சரத் என்றால் தான் அவரது வட்டாரத்தில் தெரியும்.

அவர் கிரிக்கெட் மேட்ச் பார்க்கும் போது 'பவுடர்' இழுக்கிறார். மொபைல் போன் திரையில் 'பவுடர்' போட்டு ஏ.டி.எம்.கார்டு மூலமாக அதை சீர் செய்கிறார். 500 ரூபாய் நோட்டு வைத்து இதை மறைத்துக் கொள்கிறார். இதையே வீடியோ எடுத்து, அதனை “Thug Life Moment” என்று ரீல்ஸ் ஆக அவரே வெளியிட்டுக் கொள்கிறார். 'கில்லி வெல்ல வருவாண்டா' என்று விஜய் சொன்னாரே அந்த Moment இது!

**இவர் தான் இப்போது மாண்புமிகு அமைச்சர் ஆகிவிட்டார். 'அண்டாவுல கொண்டா' என்று சொன்னவர் முதலமைச்சர் ஆனதைப் போல!**

“போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும், எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து, அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளான வர்களை மீட்டெடுத்து, அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன். போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்” என்று தமிழ்நாட்டின் முதலமைச்சரும், தமிழ்நாடும் உறுதிமொழி எடுத்துக் கொண்ட அன்று அமைச்சர் சரத்குமாரின் வீடியோவானது விழிப்புணர்வு ஏற்படுத்தும் வீடியோவாக வெளியானது. அமைச்சர் சரத்குமார் நடித்த 'போதை நாயகன்' படம் கோடிக் கணக்கான மக்களுக்கு டவுன்லோட் செய்யாமலேயே போய்ச் சேர்ந்து விட்டது.

**விஜய் சிஷ்யன் சரத்குமார் அதற்குச் சொன்ன விளக்கம் தான் சூப்பர். 'குழந்தைக்கு உடம்பு சரியில்லை. மாத்திரையை பொடி செய்து கொடுத்தேன்' என்கிறார் சரத்குமார்.**

மாத்திரையை பொடி செய்து கொடுப்பார்கள் என்பது உண்மை தான். அது மாத்திரை அல்ல. செல்போன் மீது வைத்து ஏ.டி.எம்.கார்டு மூலமாக எந்த மாத்திரையையும் பொடி செய்ய முடியாது. மாத்திரையை கனமான பொருள் மூலமாகத்தான் பொடி செய்ய முடியும். அதுவும் செல்போனில் மாத்திரையை வைத்து கனமான பொருளால் அழுக்கினால் செல்போன் கவர் நொறுங்கிவிடும். குழந்தைக்கான மாத்திரையை நசுக்கும் போது எதற்காக 500 ரூபாய் வைத்து மறைக்க வேண்டும்? வெளிப்படையாகவே பண்ணலாமே? **குழந்தைக்கு மாத்திரை கொடுப்பதை “Thug Life Moment” என்று யாராவது கொண்டாடுவார்களா? கொதிக்கும் காய்ச்சல் நேரத்தையுமா கொண்டாடுவீர்கள்?**

இதில் மிக முக்கியமான கேள்வி, அவர் சொல்லும் குழந்தை, அந்த வீடியோவில் இல்லை. 'பவுடர்' வீடியோ வெளியானதும் பாவம் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வருகிறார் 'கில்லி' சரத்.

சமூக வலைதளங்களில் ஒவ்வொருவரும் எழுப்பும் எந்தக் கேள்விக்கும் மாண்புமிகு அமைச்சர் சரத்குமாரால் பதில் சொல்ல முடியாது.

* **குழந்தைக்கு மாத்திரை கொடுக்கிறதுக்கு எதுக்கு “Thug Life moment” என்று வீடியோ போடணும்?**
* **உடம்புக்கு முடியாமல் இருக்கும் குழந்தையை அழைத்துக்கொண்டு IPL Match பார்க்கப் போவீங்களா சரத் சார்?**
* **அந்த வீடியோவில் கடைசி வரை எந்தக் குழந்தையும் காணும்?**
* **இந்த மாதிரி ஒரு குற்றச்சாட்டு எந்த ஆட்சியிலும் எந்த மந்திரி மீதும் வந்ததில்லை....இதுதான் முதல் முறை!**
* **எல்லா தொலைக்காட்சிகளிலும் இதுதான் ஓடுகிறது. மிக முக்கிய பொறுப்பு அமைச்சராக இருக்கிறார்....இதை முறையாக விசாரிக்க வேண்டும்...**

- என்று சமூக வலைதளத்தில் கேள்விகள் கேட்கப்படுகிறது. மாத்திரையை பவுடர் ஆக்குவது எப்படி என்ற வீடியோக்களை பலரும் எடுத்து பரப்பி வருகிறார்கள். ஆனால் தூயசக்தி முதலமைச்சருக்கு துளியும் கூச்சம் இல்லை. அமைச்சர் சரத்குமாரின் பவுடர் வீடியோ வெளியானதும் அவரை அமைச்சரவையில் இருந்து நீக்கி இருக்க வேண்டாமா? சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலக வைத்திருக்க வேண்டாமா? கைது செய்திருக்க வேண்டாமா?

**போதை மருந்துகள் மற்றும் மனநோய் பொருள்கள் சட்டம், 1985 (NDPS Act) இன்படி இது மிகப்பெரிய குற்றம் ஆகும். இந்தச் சட்டத்தின் கீழ் போதைப் பொருட்களை உற்பத்தி செய்தல், வைத்திருத்தல், விற்பனை செய்தல் மற்றும் நுகர்தல் ஆகியவை கடுமையான குற்றங்களாகும். இத்தகைய குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் அமைச்சராக நீடிக்கலாமா?**

அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி தி.மு.க. மாணவரணி சார்பில் போராட்டம் நடை பெற்றுள்ளது. “அமைச்சர் சரத்குமாரின் விளக்கம் த.வெ.க.வின் பாரம்பரியப்படி, குழந்தைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு அரசியல் செய்வதாகவே தோன்றுகிறது” என்று சொல்லி இருக்கிறது தி.மு.க. மாணவரணி.

**மகா யோக்கியரைப்போல சட்டமன்றத்தில் பேசிய முதலமைச்சர் விஜய், என்ன செய்யப் போகிறார்? சரத்குமாரின் பதவியை பறிப்பாரா? அல்லது தனது நாற்காலியைக் காக்க சரத்குமாரைக் காப்பாற்றுவாரா?**

பன்னாட்டு போட்டிகளில் 6 பதக்கங்கள் பெற்ற

# துளசிமதி முருகேசனுக்கு வாழ்த்து!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலை தளப் பதிவு!





**சென்னை, ஜூன் 30 - பன்னாட்டு போட்டிகளில் 6 பதக்கங்கள் வென்ற பாரா. பாட்மின்டன் வீராங்கனை துளசிமதி முருகேசனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளது வருமாறு:-

தொடர்ந்து நடைபெற்ற இரண்டு பன்னாட்டு போட்டிகளில் பங்கேற்று, பாரா. பாட்மின்டன் போட்டியில் கலந்து கொண்டு 6 பதக்கங்கள் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சரித்திர சாதனைப் படைத்த துளசிமதி முருகேசனுக்கு எனது இதயமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

3 தங்கம், ஒரு வெள்ளி மற்றும் 2 வெண்கலம் என 6 பதக்கங்களை அவர் வென்றிருப்பது, அவரது அசாதாரண திறன் உறுதிப்பாடு கடும் உழைப்பு இவை களுக்கான உன்னத எடுத்துக் காட்டாகும்.

இங்கிலாந்து மற்றும் ஜஸீஷ் நாடுகளில் நடைபெற்ற பன்னாட்டு போட்டிகளில் அவர் தன் திறனை வெளிப்படுத்தி சாதனை படைத்ததன் மூலம் நமது நாட்டிற்கு மகத்தான தொரு பெருமையைச் சேர்த்திருக்கிறார்.

வரும் ஆண்டுகளில் அவர் மேலும் பல்வேறு சாதனைகளைப் படைத்து அதன் மூலம் இந்தியாவிற்குப் பல்வேறு மரியாதையை பெற்றுத் தர நான் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# கழகத்தினரை அராஜகமாகக் கைது செய்வதா?

## த.வெ.க. அரசுக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!



**சென்னை, ஜூன் 30 - “போதை பொருளை பயன் படுத்துவது போல வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சரை பதவி நீக்கம் செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய கழக மாணவர் அணியினரை அராஜகமாக கைது செய்வதா?” என கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம் செய்துள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்துவது போல வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்ததோடு, கழகத்தினரை அராஜகமாக கைது செய்திருக்கிறது த.வெ.க. அரசு.

தங்களை தாங்களே ஜனநாயகசக்தி என்று சொல்லிக் கொள்ளும் த.வெ.க. அரசு, எதிர்க்கட்சியினர் அறவழியில் போராட்டம் நடத்தவே அனுமதி மறுக்கிறது.

கைது செய்யப்பட்ட தி.மு.க. வினரை உடனடியாக விடுதலை செய்வதோடு, குற்றச்சாட்டுக்கு உள்ளான அமைச்சர் மீது உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# பல்லாயிரக்கணக்கான கழகத்தினர் கைது!...

முதல் பக்கத் தொடர்ச்சி

செய்திருக்கும் த.வெ.க. அரசுக்கு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வெளிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில்,

பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்துவது போல வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடைபெற விருந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்ததோடு, தி.மு.க.வினரை அராஜகமாக கைது செய்திருக்கிறது த.வெ.க. அரசு என்று கூறியுள்ளார். தங்களை தாங்களே ஜனநாயகசக்தி என்று சொல்லிக்கொள்ளும் த.வெ.க. அரசு, எதிர் கட்சியினர் அறவழியில் போராட்டம் நடத்தவே அனுமதி மறுக்கிறது. கைது செய்யப்பட்ட தி.மு.க. வினரை உடனடியாக விடுதலை செய்வதோடு, குற்றச்சாட்டுக்கு உள்ளான அமைச்சர் மீது உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கழக துணை பொதுச்செயலாளர் கனிமொழி வெளிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

### தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி வலைதளம்!

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்திய தாக அப்பட்டமாக வீடியோ ஆதாரத்துடன் சிக்கிய அமைச்சர் சரத்குமாரை, பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி, அறவழியில் அமைதியான முறையில் போராடத் தயாரான தி.மு.க. மாணவர் அணியினருக்கு அனுமதி மறுத்து, அவர்களைக் கைது செய்திருக்கும் த.வெ.க. அரசின் இந்த அராஜகம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது எனக் கூறியுள்ளது. உங்களின் 'Thug Life' அமைச்சர்களின் வண்டவாளங்களைத் தோலுரித்தால் ஏன் இந்த அளவுக்குக் கை நடுங்கி, தொடை நடுங்கிப் போய் போலீஸ் ஊக்குப் பின்னால் ஒளிகிறீர்கள்? இதற்குப் பெயர் பாசிசமா இல்லை பாயாசமா தொடை நடுங்கி முதல்வரே?! என தி.மு.க. ஐடி விங் காட்டமாக விமர்சித்துள்ளது. ஜனநாயக ரீதியான ஒரு அமைதிப் போராட்டத்தைக் கூட எதிர்கொள்ளத் துணிவில்லாத ஒரு கோழை அரசாங்கம், தமிழ்நாட்டை ஆள்வது வெட்கக்கேடு! என்றும் அதிகார வெறி கொண்டு நீங்கள் போடும் இந்த சர்வாதிகார ஆட்டத்திற்குத் தமிழ்நாட்டு இளைஞர்களும், மக்களும் வீதியில் இறங்கி மிக விரைவில் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றும் தி.மு.க. ஐ.டி விங்திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

### காவல்துறையில் புகார்!

பொது இடத்தில், போதை பொருளை பயன்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டில் அமைச்சர் சரத்குமார் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஐ.பி.எல். விளையாட்டை பார்க்கும் போது அமைச்சர் சரத்குமார் போதைப் பொருள் பயன்படுத்துவது போன்ற வீடியோ வெளியாகி சர்ச்சையானது. அமைச்சரின் விளக்கம் பல்வேறு சந்தேகங்களை சமூக வலைதளத்தில் ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என வழக்கறிஞர் சரண்யா நடராஜன் என்பவர், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார். திருவல்லிக்கேணிக் காவல் நிலையத்திலும் புகார் அளிக்கப் பட்டுள்ளது.

### திருக்கோவிலூர் – விழுப்புரம்!

விழுப்புரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி தி.மு.க. சார்பில் திருக்கோவிலூர் நகராட்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தி.மு.க. மாணவரணியினரை காவல்துறையினர் கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் அடைத்தனர். இவர்களை தி.மு.க. துணை பொது செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பொன்முடி சந்தித்து பேசினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் போராட உரிமை உண்டு தெரிவித்தார். கைது செய்யப்பட்ட தி.மு.க. வினர் அனைவரையும் உடனே விடுவிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

### பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆர்ப்பாட்டம்!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக மாணவரணி சார்பில் தமிழக வெற்றி கழக அமைச்சர் சரத்குமார் அவர்கள் பொதுவெளியில் போதைப் பொருள் உபயோகப் படுத்தியதை கண்டித்து ஒருங்கிணைந்த சென்னை, மாவட்ட மாணவர் அணி சார்பில் சென்னை, எழும்பூர், ராஜரத்தினம் விளையாட்டு மைதானம் அருகில் 29.06.2026 - திங்கட்கிழமை காலை 9.30 மணி அளவில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டம் முறையாக அனுமதி கேட்டபோதும் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் 30க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் அதிகாலையில் வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டதால் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சேகர்பாபு எம்.எல்.ஏ தலைமையில் மேயர் பிரியா ராஜன், கழக மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி, கழக மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் நா.எழிலன், தமிழன் பிரசன்னா மற்றும் 2000க்கும் மேற்பட்டோர் புரசைவாக்கம் டவுட்டன் பகுதியில் ஊர்வலமாக சென்று சாலையை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தலைமை தேர்தல் உறுப்பினர்கள் பி.கே.மூர்த்தி, கே.எஸ்.எம். நாதன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், பகுதி செயலாளர்கள் ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராஜன், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, கோபி கூ.பீ.ஜெயின், ஜோசப் சாமுவேல், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட/பகுதி / வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.